செ.வெ.எண் : 15/ஆகஸ்ட் நாள் : 07.08.2017

**இராமநாதபுரம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில்**

**டெஸ்க் டாப் பப்ளிசிங் மற்றும் தையல் தொழில்நுட்பம் ஆகிய தொழில்பிரிவுகளுக்கு ஆகஸ்ட் 2017 க்கான நேரடி சேர்க்கை 15.08.2017 வரை நடைபெறவுள்ளது**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் டெஸ்க் டாடப் பப்ளிசிங் (DTPO) மற்றும் தையல் தொழில்நுட்பம் (Sewing Technology),ஆகிய தொழிற்பிரிவுகளுக்கு ஆகஸ்ட் 2017 க்கான நேரடி சேர்க்கை (Spot Admission) 15.08.2017 வரை நடைபெறவுள்ளது.

டெஸ்க் டாடப் பப்ளிசிங் (DTPO) தொழிற்பிரிவிற்கு கல்வித்தகுதியாக 10-ம்வகுப்பு தேர்ச்சியும், வயது வரம்பு 14 வயதிற்கு மேல் இருத்தல் வேண்டும். பயிற்சி காலம் : 1 வருடம்

தையல் தொழில்நுட்பம் (Sewing Technology) தொழிற்பிரிவிற்கு கல்வித்தகுதியாக 8 ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் வயது வரம்பு 14 வயதிற்கு மேல் இருத்தல் வேண்டும். பயிற்சி காலம் : 1 வருடம்.

மேற்கண்ட தொழிற்பிரிவுகளுக்கு தகுதி வாய்ந்த மகளிர் மட்டும் நேரடியாக இந்நிலையத்திற்கு தங்களது கல்வி ஆவணங்களுடன் வந்து சேர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் விபரங்களுக்கு முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், இராமநாதபுரம் அவர்களை தொலைபேசி எண்: 04567-231214 -ல் தொடர்புகொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**